# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 3/2021

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு செப்டம்பர் மாதம் 27 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜீவா | மதம் | : இந்து |
| த/பெ | : முருகன் | ஜாதி | : -- |
| வயது | : 28 | கிராமம் | : லட்சுமாபுரம் |
| தொழில் | : தட்டச்சர் | வட்டம் | : திருத்தணி |

27.09.2024

**வா.சா.2 திரும்ப அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு இந்த வழக்கில் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். வாதி ஏழுமலை அழைத்ததால் வந்து சாட்சி சொல்கிறேன் என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ம் வகுப்பு படித்துள்ளேன். இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி கிருஷ்ணனை தெரியுமா என்றால் தெரியும். 1ம் பிரதிவாதியை எப்படி தெரியும் என்றால் எங்கள் அலுவலகத்தில் தட்டச்சு செய்ய வந்தபோது தெரியும். 1ம் பிரதிவாதி கிருஷ்ணன்தான் தட்டச்சு செய்ய வந்தாரா என்றால் 1ம் பிரதிவாதி கிருஷ்ணனும் அவரது மகனும் வந்தார்.

2. நான் இந்த ஆவணத்தை தட்டச்சு செய்த வகையில் ஆவணத்தில் உள்ள சங்கதிகளை 1ம் பிரதிவாதி கிருஷ்ணனுக்கு படித்து காட்டினேனா என்றால் ஆமாம். 21.10.2019ம் தேதியிட்ட வா.சா.ஆ 1 செட்டில்மெண்ட் ஆவணத்தில் தட்டச்சு செய்தவர் அல்லது தயாரித்தவர் என்று ஆவணத்தில் எந்த இடத்திலும் என் பெயரோ கையெழுத்தோ இல்லை என்றால் சரிதான். நான்தான் ஆவணத்தில் தட்டச்சு செய்துள்ளேன் எனும் பட்சத்தில் நானே ஆவணத்தை தயாரித்தவர் என கையெழுத்து செய்திருக்கலாம் என்றால் நான்

2ம் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளேன்.

3. ஆவணத்தை எந்த காலத்திலும் 1ம் பிரதிவாதி கிருஷ்ணன் எங்கள் அலுவலகத்தில் தட்டச்சு செய்யவே இல்லை என்றாலும் வாதி 1ம் பிரதிவாதி கிருஷ்ணனை ஏமாற்றி மேற்படி ஆவணத்தை தயார் செய்துள்ளார் என்றாலும் வாதிக்கு ஆதரவாக நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. ஆவணத்தை உண்மையிலேயே நான் தட்டச்சு செய்திருந்தால் தட்டச்சு செய்தவர் என நான் கையெழுத்து செய்திருப்பேன் என்றாலும் நான் தட்டச்சே செய்யாததால்தான் அவ்வாறு குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல. அவ்வாறு தட்டச்சு செய்தவர் என கையெழுத்து செய்ய கூடாது என்று அந்தக்காலக்கட்டத்தில் அரசாணை பிறப்பிக்கப்பட்டிருந்ததால் நான் அவ்வாறு குறிப்பிடவில்லை. நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)